www.boomiirjt.com Samoogathil Kaimpengal Special Issue 23 June 2026

BOOMI INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL

E - ISSN: 3139 -1893 An international open access, peer- reviewed, refereed journal

# தாரையின் கைம்மை

முனைவர் சு. தீபா

உதவி பேராசிரியர், தமிழ்த் துறை,(தன்னிதிப் பிரிவு), அக்சிலியம் கல்லூரி, (தன்னாட்சி), காந்திநகர், காட்பாடி, வேலூர் - 632006. மின்னஞ்சல்: deepa.thiru7819@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்**

தமிழ்ச் சமூகத்தில் சங்க காலம் தொடங்கி, இக்காலம் வரை கைம்மை என்கிற வழக்கம் இருந்து வருகின்றது. கணவனை இழந்த பெண்கள் கைம்பெண்கள் என அழைக்கப்படுகின்றனர். கணவனை இழந்த நிலையில் பெண்கள் மேற்கொள்ளும் கடுமையான கட்டுப்பாடுகளுக்கு இப்பெயர் வழங்கப்பட்டதாக அறியப்படுகிறது. பெண்கள் அவர்களைச் சார்ந்தவர்களுக்கு ஆணிவேரை போன்றவர்கள். தமிழ்ச் சமூகத்தைப் பொறுத்தவரை பெண்கள் பெரிதாக மதிக்கப்பட்டனர். உயர்ந்த இடத்தில் வைக்கப்பட்டனர். தமிழ் இலக்கியங்களில் உலாவரும் பெண் கதாபாத்திரங்கள் அனைத்துமே முக்கியத்துவம் கொடுத்து உருவாக்கப்பட்டவை தான். பெண்மையை போற்றாத இலக்கியங்களே தமிழில் இல்லை எனலாம். அந்த வகையில் கம்பர் கொடுத்த இராமாயணத்திலும் பெண் கதாபாத்திரங்கள் வெகுவாக போற்றப்படுகின்றன. குறிப்பாக வானர மகளிருள் சிறந்தவளான தாரையைப் பற்றி கம்பர் உயர்த்தி பேசியிருக்கும் பாடல்கள் அதிகம். வானர மகளிருள் தாரை தலையானவளாகவே கருதப்படுகிறாள். அவளுடைய உயர்ந்த கைம்மை கால நிகழ்வுகளையே இக்கட்டுரை முன்வைக்கின்றது.

**திறவுச்சொற்கள்** : தாரை என்பவள் - கைம்மை நோன்பின் பொருள் - மூவகை கற்பு- தாரையின் கைம்மை தோற்றம்- வாலியின் மனைவி தாரை- பெண்ணெனும் பெருந்தகை

## முன்னுரை

தமிழுக்குக் கதியான இருவருள் கம்பர் தந்த இராமாயணத்தில் உருவாக்கப்பட்டிருக்கும் ஒவ்வொரு கதாபாத்திரமும் ஒவ்வொரு விதத்தில் உயர்ந்திருக்கும். தனித்தனி குணம் இருக்கும். அந்த வகையில் கிட்கிந்தா காண்டத்தில் உலா வரும் வாலியின் மனைவி தாரை தனித்துவமிக்கவளாக அடையாளப்படுத்தப்படுகிறாள். கணவன் மீது மாறாத அன்பு கொண்டவளாகவும், அறிவுக்கூர்மை மிக்கவளாகவும் சொல்லப் படுகிறாள். வானரப் பெண்ணாயினும், கணவனாகிய வாலி இறந்த பின்பு பெண்மையைப் பாதுகாக்கும் வகையில் கைம்மை நோன்பு ஏற்கிறாள். பின்னும் நாட்டின் நலனுக்காகத் தகுந்த ஆலோசனை வழங்கும் மந்திரியாகத் திகழ்கிறாள். கம்பரின் கவியழகில் தாரையின் உன்னதம் மிக அழகாக வெளிப்படுகிறது. அத்தகைய செய்திகளே இக்கட்டுரையில் எடுத்துரைக்கப்படுகிறது.

## தாரை என்பவள் யார்?

இதிகாச உலகில் எழுதப்பட்டிருக்கும் பல இராமாயணங்களில், தாரை என்பவள் வானர மருத்துவன் சுசேனனின் மகளாக அடையாளப்படுத்தப்படுகிறாள். வானர அரசனாகிய வாலியை மணக்கிறாள். கம்பராமாயணத்தில் பாற்கடல் கடைந்த போது தோன்றியவளாகவும் சொல்லப்படுகிறாள். அப்போது வாலிக்குத் தாரை வழங்கப்பட்டதாகவும் அறியப்படுகிறது. சில தமிழ் தெலுங்கு மரபுகளில் வாலி சுக்ரீவன் இருவருக்கும் பொதுமையயாளகத் தாரை வழங்கப்பட்டதாகவும் அறியப்படுகிறது. ஆனால் கம்பராமாயணத்தில் வாலியின் மனைவியாகவே தாரை அறியப்படுகிறாள். அவள் மிகச்சிறந்த ராஜதந்திரியாகத் திகழ்கிறாள். தீர்க்கதரிசியாகவும் விளங்குகிறாள். துணிச்சல் மிக்கவளாகவும் அறியப்படுகிறாள்.

கம்பர் தமது இராமாயணத்தில், தாரையை சிறந்த மனைவியாகவும், அறிவார்ந்த அரசியாகவும், ஆற்றல் மிக்கவளாகவும் அறியச் செய்கிறார். வானரப் பெண்ணாயினும் கற்பில் சிறந்தவளாகத் தாரை அறியப்படுகிறாள்.

**தாரையின் பண்புகள்**

மணாளனே மங்கையின் பாக்கியம், கணவனே கண்கண்ட தெய்வம் என்று வாழ்வது மட்டுமல்லாது கணவனுக்கு நல்ல தோழியாக, சிறந்த ஆலோசகராக, அரசியல் நுணுக்கங்களைத் தெளியச் செய்பவளாக, பாதை மாறாது கணவனை காத்துக் கொள்வதில் நல்ல மனைவியாக திகழ்பவளே நல்ல பெண்மணி. இத்தனை வகைமைகளையும் தன்னுள்ளே பதித்தவள் தான் வாலியின் மனைவியாகிய தாரை. வாலி, சுக்ரீவன், அங்கதன் என தன்னைச் சுற்றி இருந்தவர்களுக்குத் தக்க நேரத்தில் தகுந்த ஆலோசனை வழங்கிய மதியூகியாக விளங்கியவள் தாரை.

**பெண்ணென்னும் பெருந்தகை**

வாலி இறந்தபின், சுக்ரீவன் தாரையைத் தன் தாயென நினைத்து அவளது ஆலோசனைகளையும் கேட்டபடி அரசாண்டான். ஆனால் நாட்கள் கடந்தன, ராமனுக்கு கொடுத்த உறுதிமொழிகளும் மறந்தன. இராமன் வெகுண்டான்; இலக்குவன் கோபத்தோடு கிட்கிந்தை அரண்மனையை நெருங்கியதை அனுமன் உரைத்து ஆலோசனை கேட்டு போது, “என்ன செய்வது என்று இப்ப வந்து கேட்கிறீர்கள். யாரும் செய்ய முடியாத தீய காரியத்தை செய்துவிட்டு வந்து நிற்கிறீர்கள். நன்றி கொன்ற தீய செயலை செய்துவிட்டு அதை தீர்க்க என்ன வழி என்று திகைக்கிறீர்கள். நீங்கள் பிழைப்பது அரிது " என்கிறாள். இதனை,

*“எய்தி, மேல் செய்யத்தக்கது என்? என்றலும்,*
*செய்திர், செய்தற்கு அரு நெடுந் தீயன;*
*நொய்தில் அன்னவை நீக்கவும் நோக்குதிர்;*
*உய்திர் போலும், உதவிக்கொன்றீர் எனா”*

*(கிட்கிந்தை படலம், பா. 27)*

என்று கடிந்து பேசுகிறாள். செய்த குற்றத்தைச் சுட்டிக்காட்டும் பெருந்தகையாக தாரை திகழ்கிறாள்.

இவையெல்லாம் வாலி இறந்த பிறகு தாரை மேற்கொள்ளும் செயல்பாடுகள். பொதுவாக கணவன் இறந்த பின்பு பெண்கள் வாழ விரும்பாத காலத்தில் வாழ்ந்த தாரை, தனது மகனுக்காகவும் செரிவான அரசுக்காகவும் தனது கைம்மையை எதிர்கொள்கிறாள். அந்த வகையில் அவளது கைம்மை மேன்மை பெறுகிறது.

**மூவகைக் கற்பு**

கற்பு நெறியை உயிரெனக் கொண்டொழுகும் பெண்கள் தன் கணவன் இறந்த பின்பு மேற்கொள்ளும் வாழ்க்கை முறையை கைம்மை என்பர். நோன்பில், நெய்யும் எண்ணெயும் கலவாத ஒப்பில்லாத நீர்சொற்றை உண்டு, எள் துவையலின் துணையோடு புளியிட்ட கீரையோடு உடலுக்கு இதம் தரும் படுக்கையில் உறங்காது, கற்கள் நிறைந்த படுக்கையில் உறங்கி ஒரு கடுமையான வாழ்க்கையை மேற்கொள்ள வேண்டும். கணவனுக்கு மட்டுமே மலர் சூடி மகிழ்ந்த கூந்தலையும் மழித்து விட வேண்டும். அணிகலன்களைத் துறந்து அழகியல் உணர்வை மறந்து வாழும் வாழ்க்கையை விட இறந்து விடுவது மேலானது. கணவன் இறந்த செய்தியை கேட்டவுடனே உயிர் தாங்காது பிரிவதை தலைக்கற்பென்றும் உடன்கட்டை ஏறி உயிர் மாய்த்தலை இடைக்கற்பென்றும் உயிர்த்துறவாது உலகியல் இன்பங்களை துறந்து கைம்மை நோன்பேற்பதை கடைக்கற்பென்றும் பண்டைத் தமிழ் இலக்கியங்கள் குறிப்பிட்டுள்ளன. (hindu tamil.in). கணவன் இறந்த பின்பு வாழ விரும்பாத பெண்கள் இருந்த காலத்தில் கடுமையான கைமை நோன்பை கொண்டு தாரை வாழ்ந்த வாழ்க்கையில் அவளது கைம்மை வாழ்க்கையை உயர்வாக எண்ண வைத்துவிடுகிறது.

**கைம்மை நோன்பு**

கைம்மை என்பதன் வேர்ச்சொல் ‘கை’ என்பதாகும் இது கையறுநிலை என்பதனை அடிப்படையாகக் கொண்டு பிறந்ததாகும் கையறுநிலை என்பது வருந்தி செயலற்று இருக்கும் நிலை என்று பொருளாகிறது.(க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி, ப. 488). இந்த விளக்கத்திலிருந்து உருவான கைம்மை என்பதற்கு கணவனை இழந்து வாழும் நிலை (க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி, ப. 487) என்ற பொருள் பெறப்படுகிறது.

இக்கொடிய கைம்மை நோன்பு, பெண்ணுக்குக் கட்டுப்பாடுகள் விதிப்பதாக தமிழ் சமூகத்தில் இருந்துள்ளது. இது கணவனை இழந்த பெண்ணுக்கு ஏற்படுத்தப் பட்டதாகும் இதேபோன்று மனைவியை இழந்த கணவனது வருத்தம் ஒரு பாடலில் மட்டுமே குறிப்பிடப்பட்டுள்ளது என்ற செய்தியும் இலக்கியங்கள் வழி அறிய முடிகிறது. (Pandian journal of women's studies, volume 3, issue 2, November 2023). இத்தனை கடுமையான கைம்மை நோன்பை தாரை மேற்கொண்ட விதத்தில் அவளது மனதின் உறுதிப்பாட்டை அறிய முடிகிறது.

### தாரையின் தோற்றம்

சுக்ரீவனைக் காண லட்சுமணன் கிட்கிந்தை அரண்மனைக்கு வருகிறான். அவனது உள்ள கருத்தை அறிய எண்ணிய தாரை, அவன் முன்னே செல்கிறாள். அப்போது அவளது தோற்றத்தை,

*"மங்கல அணியை நீக்கி மணி அணி துறந்து வாசக்*
*கொங்கலர் கோதை மாற்றிக் குங்குமம் சாந்தம் கொட்டாப்*
*பொங்கு வெம் முலைகள் பூசக் கழுத்தோடு மறைய போர்த்த*
*நங்கையைக் கண்ட வள்ளல் நயனங்கள் பனிப்ப நைந்தான்"*

*(கிட்கிந்தை படலம், பா.எ- 5)*

என்று இலக்குமணன் காணுவதாகக் கம்பர் குறிப்பிடுகிறார். கணவனை இழந்த தாரை, திருமாங்கல்யத்தை ஒழித்து மணிகள் பதித்து செய்யப்பட்ட மற்ற அணிகலன்களையும் நீக்கி, நறுமணம் உள்ளதும் தேன் மிகுந்ததுமான மலர் மாலைகளையும் அணியாது விலக்கி, குங்குமப் பூவின் குழம்பையும், சந்தனக் குழம்பையும் பூசிக்கொள்ளாத பருத்த கொங்கைகள், பாக்கு மரம் *போன்ற கழுத்துடன் மறையும்படி மேலாடையால் நன்கு போர்த்துள்ள மகளிரில் சிறந்தவளாக தாரையின் இறங்கத்தக்க தோற்றத்தைக் இலக்குமணன்* காணுகிறான். கண்டவுடன் தன் தாயரை நினைத்தபடி கண்ணீர் வடித்ததாகக் கம்பர் எழுதுகிறார். வானர மங்கையான தாரை, கணவனை இழந்த மகளிர் ஏற்றுக்கொள்ளும் கோலத்தை தரித்திருப்பதாக கம்பர் குறிப்பிடுவதிலிருந்து தாரையின் மேன்மையான பெண்மை குணம் தனை நன்கு உணர முடிகிறது. மேலும்,

*"ஆர்கொலோ உரை செய்தார்? என்று அருள் வர சீற்றம் அஃகே,*
*பார்குலாம் முழுவெண் திங்கள், பகல் வந்த படிவம் போலும்,*
*ஏர்குலாம் முகத்தினாளை இறைமுகம் எடுத்து நோக்கி,*
*தார்குலாம் அலங்கல் மார்பன், தாயரை நினைந்து நைந்தான்"*

*(கிட்கிந்தை படலம், பா.எ. 50)*

என்று கம்பர் குறிப்பிடுகிறார். இலக்குவன் தாரையைக் காணும் போது தன்னுடைய தாய்மார்களை நினைத்து நைந்ததாகக் கூறுகிறார் கம்பர். தன் தாய்மார்களும் இப்படித் தானே விதவை கோலத்தில் இருப்பார்கள் என்று நினைத்து வருந்தினான். தாரையை, இலக்குவனின் தாய்மார்களுக்கு இணையாகக் கூறுவதன் மூலம், தாரையைப் பற்றி உயர்ந்த எண்ணத்தை உருவாக்குகிறார் கம்பர். தாரையின் கைம்மைத் தோற்றத்தால் இலக்குவனின் கோபம் தணிவதாகவும் குறிப்பிடுகிறார்.

### மிகச்சிறந்த நெறியாளராய் தாரை!

வாலி மற்றும் சுக்ரீவனுக்கு இடையேயான போரில் இராமனுக்கு உதவுவதாய் சொன்னதால் சுக்ரீவனுக்கு இராமன் உதவ, போரில் வென்றான் சுக்ரீவன். ஆனால் சொன்ன சொல் மறந்தான் சுக்ரீவன். இராமன் வெகுண்டான். இலக்குவன் உணர்த்த முற்பட்டான். அங்கதன், இலக்குவன் கோபமாய் வருவதையும் அதற்கான காரணத்தையும் தாரையிடம் தெரிவிக்க, அவளும் கோபம் கொண்டாள். வானரர் செய்த தவற்றையும், செய்ய மறந்த செயலையும் சுட்டிக்காட்ட தயங்கவும் இல்லை. "செய்யத்தகாத பெருந்திய செயல்களை செய்வீர் அவற்றால் உண்டாகும் தீமைகளை எளிதில் நீக்கிக் கொள்ளவும் வழி பார்ப்பீர் செய்ந்நன்றி மறந்தவர்களான நீங்கள் தப்பி வாழ்வீர் போலும் என்று கடிந்து கொள்கிறாள். இதனை,

*"திறம்பினீர் மெய்; சிதைத்தீர் உதவியை*
*நிறம்பொலீர்; உங்கள் தீவினை நேர்ந்தால்*
*மறம் செய்வான் உறின் மாளுதிர், மற்று இனி*
*புறஞ் செய்து ஆவது என்"*

*(கிட்கிதை படலம், பா.எ.31)*

என்ற வரிகளால் அறியலாம். இதில் வாலியோடு தாரை இறந்திருந்தால் தன் குலத்து அரசிற்கு சிறந்த நெறியை புகட்டி இருக்க முடியாது. அந்த வகையில் இங்கு தாரையின் கைம்மை மேன்மை அடைகிறது.

### நிகரற்ற இணையாள்

வாலியின் மனைவி தாரை தன் கணவன் இறந்த செய்தியை கேட்டவுடன் தன்னுயிர் போக துடித்தாள். அவன் மேலே விழுந்தாள். இதனை,

*"குங்குமம் கொட்டி என்ன, குவி முலை*
*குவட்டுக்கு ஒத்த*
*பொங்கு வெங்குருதி போர்ப்ப புரிகுழல்*
*சிவப்ப, பொன்-தோள்*
*அங்கு அவன் அலங்கல் மார்பில்*
*புரண்டனள் - அகன்ற செக்கர்*
*வெங்கதிர் விசும்பில் தோன்றும்*
*மின்னெனத் திகழும் மெய்யாள்"*

*(தாரை புலம்புறு படலம், பா.எ-2)*

என்று குறிப்பிடுகிறார் கம்பர். குங்குமம் கொட்டியது போன்ற குருதி படர்ந்த வலியின் மார்பில் விழுந்து அழுதாள் தாரை. அவளது புரிகுழல் சிவக்கும்படியாக வாலியின் மாலையணிந்த மார்பில் புரண்டு அழுதாள். கணவன் உயிர் துறந்த பின் மனைவி உயிர் வாழ்தல் என்பது இல்லாதிருந்த வழக்கில் வாலி இறந்ததை கண்டும் உயிர் வாழ்கிறேனே என்கிற அவளது புலம்பல் கைம்மையின் கடுமையை விளக்குவதாக உள்ளது.

### தாரையின் புலம்பல்

வாலி இறந்த பின்பு அதை ஏற்றுக் கொள்ள இயலாத தாரை,

*"நையா நின்றனன் நான் இருந்து இங்ஙன்*
*மெய் வானோர் திருநாடு மேவினாய்*
*ஐயா நீ எனது ஆவி என்பதும் பொய்யோ?*
*பொய் உரையாத புண்ணியா"*

*(தாரை புலம்புறு படலம், பா.எ.9)*

என்று வாலியின் உடலை பார்த்து கதறுகிறாள். "செய்வதறியாது நிற்கின்றேன்; நானும் இங்கு இருக்கின்றேனே; நீயோ வானோர் திருநாடு சென்று விட்டாய்; நீ எனது உயிர் என்பது பொய்யா? நீ வீழ்ந்த பின்பும் நானும் இருக்கின்றேனே; பொய் உரையாத புண்ணியனே" என்று சொல்லி புலம்புகிறாள். இங்கு கணவன் இறந்த பின்பு உயிர் வாழாத பெண்மையின் உன்னதம் வெளிப்படுவதாக அறிய முடிகிறது.

### தாரையின் விம்மல்

வாலி வீழ்ந்த பின்பு தாரை அவன் உடலை பார்த்து,

*"சொற்றேன் முந்துற அன்ன சொல் கேளாய்*
*அற்றான் அன்னது செய்கலான் எனா*
*உற்றாய் உம்பியை, ஊழி காணும் நீ*
*இற்றாய்; நான் உன்னை என்று காண்கெனோ?"*

*(தாரை புலம்புறு படலம் பா.எ.13)*

என்று புலம்புவதாக குறிப்பிடுகிறார் கம்பர். "முன்னமே சொன்னேனே என் சொல் கேளாமல் போருக்குச் செல்லத் துணிந்தாயே! இராமன் அடாதது செய்யமாட்டான் என்றாயே! உன் தம்பிக்காக நீ இறுதி காலம் செல்லும்படி நேர்ந்ததே!" என்று சொல்லி அழுகிறாள், விம்புகிறாள். தன் கணவன் மீதான தரையின் அன்பு நிறைவாக வெளிப்படுவதை இவ்வரிகளால் அறிய முடிகிறது. இப்படி எல்லா நிலைகளிலும் தாரையின் புலம்பலும் விம்மலும் கணவனை விட்டு விலகாத அவளது பேரன்பு வெளிப்படுவதை காண முடிகிறது. கணவன் இறந்த பின்பு உயிர் வாழ விரும்பாத நிலைமையும் புலப்படுகிறது. ஆனாலும் தனது மகனுக்காகவும் நேர்மையான அரசுக்கா கவும் தான் ஏற்றுக்கொண்ட கடுமையான கைம்மை முடிவை நினைந்து வாடும் வகைமையும் கம்பரது வரிகளில் நன்கு அறிந்து கொள்ள முடிகிறது.

### நிறைவாக

வாலியின் மனைவியாகிய தாரை அவனுக்கு கண்ணின் மணி போன்றவளாக திகழ்ந்தவள்! அமிர்தம் போன்ற மூங்கிலின் இயல்பை கொண்டவள்! தன் துயர் பொறுத்து தன் மகனுக்காக கணவன் இறந்த பின்பும் உயிர் வாழ துணிந்தவள்! உயிர் போன்ற கணவன் இறந்த பின்பு உடல் மட்டும் வாழ்வது எங்கே? என அரற்றிய உயர் குணத்தினாள்! இராமன் துணையோடு சுக்ரீவன் போர் புரிய துணிந்தபோது, வாலியை எதிர்க்கும் ஆற்றல் இல்லாத சுக்ரீவனின் போர் துணிவு குறித்து ஆராய வேண்டுமென ஆலோசனை தந்தவள்! தனித்து நிற்கும் மகனைக் கண்டு ஏங்கினாள்!

நீதியும் தர்மமும் இடம், பொருள், ஏவல் கருதி வாசிக்கப்படுமோ என அரற்றினாள்! இப்படி எல்லா நிலையிலும் உயர்ந்த சொற்களையே பகிர்ந்த தாரையின் கைம்மை குறித்து கம்பர் சொன்னது பெருமளவு! இக்கட்டுரையில் சொல்ல முடிந்ததோ சிறிதளவே!

**ஆய்விற்கு பயன்படுத்திய ஆதாரங்கள்**


1. க்ரியாவின் தற்கால தமிழ் அகராதி, க்ரியா, சென்னை, 2008
2. சுப்பிரமணியப் பிள்ளை, கோ., வாலி வதை: செர்ணம்மாள் சொற்பொழிவு, அண்ணாமலைப் பல்கலைக் கழகம், அண்ணாமலை நகர். பதிப்பு - 1969.
3. ஞானசுந்தரத்தரசு அ. அ., கம்பன் புதிய தேடல், தமிழ்ச் சோலை பதிப்பகம், புதுக்கோட்டை. பதிப்பு - 2012.
4. hindu tamil.in
5. Pandian journal of women's studies volume 3, issue 2, November 2023